# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No. I, PUDUKKOTTAI.

**CC. No. 198/2024**

| | | | |
|---|---|---|---|
| Deposition Witness | அ.சா.1 | Calling | ஓட்டுநர் |
| Witness Name | திரு. கோவிந்தராஜன் | Religion | |
| Father's Name | சௌந்தராஜன் | Age | 34 |
| Village | காமராஜபுரம் | | |
| Taluk | புதுக்கோட்டை | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.08.2025.

**(எதிரி ஆஜர்.).**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். கடந்த 12.07.2023 அன்று காலை 09.30 மணியளவில் எனது அப்பா சௌந்தராஜன் எனக்கு முன்னே கிழக்கு நோக்கி Kings Bakkery அருகே நடந்து சென்றுக் கொண்டிருந்தார். நான் அவருக்கு பின்னே நடந்து சென்றுக் கொண்டிருந்தேன்.

2. அப்போது அதே திசையில் வந்த TN 55 BU 5801 என்ற பதிவெண் கொண்ட PULSAR RS 200 என்ற இரு சக்கர வாகனம் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வந்து எனது தந்தையின் பின்புறம் இடித்தது. எனது அப்பா முன்புறமாக கீழே விழுந்ததில் அவருக்கு தலையின் இடது புறம், இடது கண், வலது கால் முட்டி ஆகியவற்றில் அடிபட்டது.

3. அவசர ஊர்தி மூலம் அவரை PMCH க்கு அழைத்து சென்றேன். அன்று மாலை 06.30 மணியளவில் சிகிச்சை பலனின்றி எனது தந்தை இறந்துவிட்டார். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம்என்னுடையது தான். புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ. 1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** ஆஜர் எதிரி தான் சம்பவத்தின்போது பல்சர் இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் ஆவார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** – எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை எனத் தெரிவித்தார்.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு சாட்சியிடம் வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஓம்/– சி.பாரதி)

நீதித்துறை நடுவர் எண் –1 ,

புதுக்கோட்டை.